ஆகஸ்ட் 2026

# அதிசசிந்தனை

ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்

மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்

மாதாந்திர நோக்கம்:

## சமூகம்: வேற்றுமையில் ஒற்றுமை

மலேசிய சமூகம் வேற்றுமையில் ஒற்றுமை என்ற வளமான பண்பால் அடையாளப்படுத்தப்படுகிறது. இங்கு பல்வேறு கலாச்சாரங்கள், மொழிகள், மற்றும் மரபுகள் ஒரு பகிரப்பட்ட தேசிய மற்றும் ஆன்மீக வாழ்வின் அங்கமாக இணைந்து வாழ்கின்றன. ஆன்மீக மேய்ப்புணிக் கோணத்தில் பார்க்கும்போது, இந்த பன்முகத்தன்மை என்பது வெறும் மேலாண்மை செய்யப்பட்ட வேண்டிய சவால் அல்ல; மாறாக திட்டமிட்ட உறவுப்பாலங்களை உருவாக்குவதன்மூலம் வளர்க்கப்பட வேண்டிய ஒரு கொடையகும். வெறும் மேலோட்டமான இணக்கமான வாழ்வைத் தாண்டி, உண்மையான எதிர்கொள்ளலை நோக்கிய நேர்மையான உரையாடலை வளர்க்க திருஅவை அழைக்கப்படுகிறது. இங்கு வேறுபாடுகளைக் கண்டு அச்சப்படாமல், அவை மரியாதையுடனும் திறந்த மனதுடனும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதன் பொருள் என்னவென்றால் பொது நலனை மேம்படுத்தும் கூட்டுத்திட்டங்களில் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதாகும்; குறிப்பாக, கல்வி, சமூக நல உதவிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நலிவடைந்தோருக்கான ஆதரவு. அதே வேளையில், ஒவ்வொரு கலாச்சாரமும் மதிப்படும் மற்றும் ஒவ்வொரு குரலும் கேட்கப்படும். பாதுகாப்பான உள்ளடக்கிய சூழலை உருவாக்குவதும் சம அளவில் முக்கியமானது.



## தேர்ந்து தெளிதல்

### செவிமடுத்தலில் இருந்து செயல்

ஒவ்வொரு சிறிய குழுவும் தாங்கள் ‘‘நாம்’’ என்ற கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொள்ளவும், தூய ஆவியார் எதற்கு அழைத்தார் என்று உணர்வதில் கவனம் செலுத்தவும் அழைத்தல். அதிசவாக, அன்றாட வாழ்க்கையில் ‘எளிய செயலைச் செய்ய’ வேரூன்ற உதவும் ஒரு வார்த்தையை அடையாளம் காணுதல்.

எடுத்துக்காட்டு:

- ஒரு அதிச வாக நாம் மேலும் தூரநோக்குடன் இருக்கவேண்டும். யாருக்கு அக்கறை காட்டவேண்டும், யாரை அழைக்கவேண்டும், அல்லது யாருடன் உடன் செல்லவேண்டும்? என்று கடவுள் அழைக்கிறாரோ அவர்களை அடையாளம் காணவேண்டும்.

## பரிந்துரை இறைவேண்டல்

வழிநடத்துனர் பங்கேற்பாளர்களை சுருக்கமான இறைவேண்டலைச் செய்ய அழைத்தல்.

எடுத்துக்காட்டு:

.......‘‘ஆண்டவரே, உரையாடல், மரியாதை இமறும் அன்பின்மூலம் பாலங்களைக் கட்டியெழுப்ப எங்களுக்கு உதவியருளும். இதனால் எங்கள் ஒற்றுமை உமது இறையரசின் நல்லிணக்கத்தைப் பிரதிபலித்திட உம்மை மன்றாடுகிறோம்.

...... ‘‘ஆண்டவரே, வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ள நாங்கள் போராடும்போது எங்களுக்கு வலுவூட்டியருளும். மேலும் பிறரைத் தீர்ப்பிட தூண்டப்படும்போது எங்கள் இதயங்களை மென்மையாக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

பதிலுரை: ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

## நிறைவு இறைவேண்டல்:

ஆண்டவர் கற்றுத் தந்த இறைவேண்டல்

- தமதிரித்துவ புகழ் (தந்தைக்கும் மகனுக்கும்...)
- அமைதியைப் பகிர்ந்துகொள்வோம்.



## முடிவு பாடல்:

விண்ணகத் தந்தையின் பிள்ளைகளே

விண்ணகத் தந்தையின் பிள்ளைகளே
ஆண்டவர் இயேசுவின் நண்பர்களே
உலகிற்கு ஒளியாய் வாழ்ந்திடவே
அன்பின் பலியினில் இணைந்திடுவோம் (2)
கொண்டாடுவோம் இன்று கொண்டாடுவோம்
ஆண்டவரின் நாளை போற்றிப் பாடுவோம்
பண்பாடுவோம் நல்ல பண்பாடுவோம்
படைத்திட்ட தேவனையே பாடிப்புகழ்வோம்

1. இயேசுவின் வார்த்தைகள் கேட்டிடுவோம்
இதயத்தில் அதனை ஏற்றிடுவோம்
அன்பெனும் மழையால் பலன் கொடுப்போம்
அனைவர்க்கும் பகிர்ந்தே வாழ்ந்திடுவோம் (2)
இறைவனின் பிள்ளைகள் நாம் என்றே
இகமதில் அனைவர்க்கும் சாற்றிடுவோம் -
கொண்டாடுவோம்

2. பாவத்தின் சுமைகளை இறக்கி வைப்போம்
பரிகாரம் புரிந்தே தூய்மையாவோம்
பிறரன்புப் பணியினில் மகிழ்ந்திடுவோம்
தூயநல் ஆவியில் கனிகொடுப்போம் (2)
உயிர்தரும் விண்ணக உணவினையே
விருந்தினில் உண்டு வாழ்வடைவோம் -
கொண்டாடுவோம்

**வெளியீடு**: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org

INTERNAL CIRCULATION ONLY

# எதிர்கொள்வது

## தொடக்கப்பாடல்

இறைவனைப் புகழ்வோம் வாருங்கள்

இறைவனைப் புகழ்வோம் வாருங்கள்
இமறைமக்கள் யாவரும் கூடுங்கள்
எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களிலும்
அவர் பெயர் சொல்லி வாழ்த்துங்கள்
இறைவா இதோ வருகின்றோம் – 2

1. இறைவன் நம்மை தேர்ந்தெடுத்தார்
கறையில் குலமாய் மாற்றி விட்டார் (2)
இருளில் நின்று விடுவித்தார்
அரியதம் ஒளிக்கு நமை அழைத்தார்

2. அன்று நாம் இறைவன் மக்கள் இல்லை
இன்றவர் புதல்வர் யாரில்லை (2)
அன்று நாம் இரக்கம் அறியவில்லை
இன்றவர் இரக்கம் யாருக்கில்லை

## தொடக்க இறைவேண்டல்

(ஆண்டவருக்கு முன் நம்மையே கையளித்து, தூய ஆவியாரிடம் நம் உள்ளங்களைத் திறப்போம்)

தூய ஆவியாயானவரே, திருமுழுக்கின்
வழியாக எங்களை ஒரே உடலாக
உருவாக்கியவரே, அன்பிலும் உண்மையிலும்
எங்களை ஒன்றிணைப்பீராக.
பிறரை முந்திச்செல்லவோ,
அவர்களை விட்டு விலகியோச் செல்லாமல்,
அனைவருடனும் ஒன்றித்து,
இணைந்து நடக்க எங்களுக்குக்
கற்றுக்கொடும்.
புனித பவுல் எங்களுக்கு
நினைவூட்டுவதுபோல, நாங்கள் பலராக
இருந்தாலும்,
கிறிஸ்துவுக்குள் ஒரே உடலாக
இருக்கிறோம்.
நீர் எங்களுக்கு அளித்த வரங்கள்,
கலாச்சாரங்கள் மற்றும் குரல்களின்
பன்முகத்தன்மையை நாங்கள் மதிக்க
எங்களுக்கு உதவிசெய்வீராக.
ஆமென்.

## மேய்ப்புப்பணிப் பாதை

நம்முடைய அதிச ஒன்றுகூடல்கள் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்கானவை அல்ல. அவை திருஅவையின் இன்னொரு முகம், மற்றுமொரு பெயர், காயங்கள், கொடைகள் மற்றும் வேறுபாடுகளின் சிறுவடிவம். அவை நம்மைப் பற்றியவை. ஆளுமை மோதல்கள், தலைமுறை இடைவெளிகள், கலாச்சார வேறுபாடுகள், சோர்வு, தவறான புரிதல்கள் போன்ற பதற்றங்கள் நம்முடைய சிறிய குழுக்களுக்குள்ளேயே கூட, இதுபோன்று எழுகின்றன. ஆனால் இந்த வேறுபாடுகளை, 'ஆரோக்கியமான பதட்டங்கள்' என்று கருதலாம். உடலின் எந்தப் பகுதியும் தனக்காக இயங்குவதில்லை என்பதை புனித பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். உண்மையான ஒற்றுமை வேறுபாடுகளை அழிப்பதில்லை மாறாக அது அவற்றை மீட்கின்றன.

திருஅவை வேற்றுமைக்கு அஞ்சுவதில்லை. அது தூய ஆவியாரின் வல்லமையால், அதைச் சார்ந்து செழித்து வளர்கிறது. ஒற்றுமை என்பது எப்போதும் ஒரே சீராக இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. அது கிறிஸ்துவில் உள்ள ஒன்றிப்பு, தூய ஆவியாராலும், ஒரு திருமுழுக்கினாலும், ஒன்றித்துப் பிணைக்கப்பட்டுள்ளது. வேற்றுமைத்தன்மை வரவேற்கப்படும்போது, திருஅவை நம்பகத்தன்மை பெறுகிறது.

நமது பங்கு மற்றும் அதிச க்களின் சூழலில் சிலர் தலைவர்களாகவும் மற்றும் பலர் அமைதியாகவும் பணியாற்றுகிறார்கள். சிலர் போதிக்கிறார்கள். சிலர் நோயாளிகளைச் சந்திக்கிறார்கள். சிலர் துணிவோடு பேசுகிறார்கள். மற்றவர்கள் அமைதியாகப் பரிந்துரை இறைவேண்டல் செய்கிறார்கள். உடலின் எந்தப் பகுதியும் தனக்காகவே இயங்குவதில்லை என்பதை புனித பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். உறவுகளின் மாற்றம் என்பது, தீர்ப்பிடுவதற்கு முன் செவிசாய்க்கக் கற்றுக்கொள்வது. மனக்கசப்புக்குப் பதிலாக, நல்லிணக்கத்தை தேர்ந்தெடுப்பது. மற்றவர்களைத் தடைகளாகக் கருதாமல், ஒரே உடலின் உறுப்புகளாகப் பார்ப்பது ஆகும். நாம் நம்மை மட்டுமே மையமாகக் கொண்ட ஆறுதலின் வளையங்களாக மாற அனுமதிக்க வேண்டாம். உறவுகள் குணமடைந்து, ஒற்றுமை ஆழமாகும்போது, தூய ஆவியார் இயல்பாகவே நம்மை மறக்கப்பட்ட அயலாரை நோக்கியும், விளிம்பு நிலையில் இருக்கும் குடும்பங்களை நோக்கியும், திருஅவைக்கே வராதவர்களையும் நோக்கியும் சென்று சந்திக்க நம்மைத் தூண்டுகிறார்.

# இறைவார்த்தை

## 1 கொரிந்தியர் 12: 12-13

உடல் ஒன்றே; உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார். ஏனெனில், யூதரானாலும் கிரேக்கரானாலும், அடிமைகளானாலும் உரிமைக் குடிமக்களானாலும் நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம். அந்த ஒரே ஆவியையே பானமாகவும் பெற்றோம்.

மேற்குறிப்பிட்ட இறைவார்த்தையை தியானித்து, கீழ்க்கண்ட கேள்வியோடு சிந்தித்துப் பார்க்க ஒரு சில நிமிடங்கள் அமைதியுடன் மன்றாடுங்கள்.

மற்றவர்கள் என்னிடமிருந்து மாறுபட்டு சிந்திக்கும்போதோ அல்லது செயல்படும்போதோ, நான் அவர்களின் திறமைகளை உண்மையாகக் கவனித்து மதிக்கிறேனா?

# உரையாடல்

## ஆவியில் கலந்துரையாடல்

4–6 பேர் கொண்ட குழுவில் கீழ்க்கண்ட மூன்று சுற்றுகளில் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு பகிர்வுக்குப் பிறகும் ஒரு நிமிடம் அமைதியில் இருப்போம்.

**சுற்று 1** "நான்" என்னும் கண்ணோட்டத்தில் (அமைதியில் தியானிக்க தயாராயிருங்கள். அனைவரும் பகிர்ந்துகொள்ளலாம், ஆனால் ஒவ்வொருவரும் 2 நிமிடத்திற்கு மேல் பகிரக்கூடாது. மற்றவருடைய பகிர்வையொட்டி எந்தக் கருத்தும் தெரிவிக்க வேண்டாம்)

- ஒற்றுமையை வளர்ப்பதற்காக, என்னைச் சுற்றியுள்ள பன்முகத்தன்மையை மதித்து ஏற்றுக்கொள்வதற்கு, எனது எந்தத் தனிப்பட்ட பழக்கவழக்கங்கள் அல்லது மனப்பான்மையை நான் மாற்றிக்கொள்ளவேண்டும்.?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 2** "நீங்களும் நானும்" என்னும் கண்ணோட்டத்தில்:
(இப்போது குழுவில் மற்றவர் பகிர்ந்த கருத்துகளுக்குப் பதில் அளிக்க அழைப்பு – ஒவ்வொருவரும் ஒருமுறை மட்டுமே தங்களுடைய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.)

அனைவரின் கருத்துகளையும் செவிமடுத்தபின்:

- மற்றவர்கள் பகிர்ந்துகொண்டவற்றில் என் கவனத்தை ஈர்த்தது எது?
- பொதுவான போராட்டங்கள் அல்லது பகிர்ந்துகொள்ளப்பட்ட நம்பிக்கைகளை நான் எங்கே காண்கிறேன்?

(ஒன்று அல்லது இரண்டு குறிப்புகளைத் தெரிவிக்கவும்)

**சுற்று 3** – 'நாம்' என்னும் கண்ணோட்டத்தில்:
(இப்போது வழிநடத்துனர் அல்லது பொறுப்பாளர் அனைவரும் பகிர்ந்துகொண்டவற்றில் இருந்து பொதுவான கருத்தைத் தேர்ந்தெடுக்குமாறு அனைவரையும் அழைப்பார்)

- பன்முகத்தன்மையில் ஒற்றுமை குறித்து தூய ஆவியார் நமது அதிச வுக்கு என்ன கூறுகிறார். மேலும் நமது சமூகத்தில் நாம் எவ்வாறு பாலங்களைக் கட்டுபவர்களாக மாறமுடியும்?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)